**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சேந்தமங்கலம்**

**OS. No.267/2020**

**P.W.1 நாள் - 26.02.2022**

| | | |
|---|---|---|
| பெயர் | : | முருகேசன் |
| த/பெயர் | : | கிருஷ்ணம்பிள்ளை |

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

7 ½ செண்டிற்கு மட்டும் தான் சர்வீஸ் கேட்டு விண்ணப்பம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தின் சொத்து விவரத்தில் இதர சொத்துக்குளுக்கு சேர்த்து தான் சர்வீஸ்கேட்டுள்ளேன் என்ற விவரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. எந்தெந்த நிலங்களுக்கு சர்வீஸ் மூலமா நீர்பாய்ச்ச போகிறேன் என்ற விவரத்தை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. வழக்கறிஞர் என்னிடம் எனது அனைத்து நிலங்களுக்கு சர்வீஸ் பாத்தியப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளதாக என்னிடம் சொன்னார். 7 ½ செண்டில் எனக்கு எவ்வளவு பாத்தியம் என்றால் பொதுவில் 8 ல் 1 பங்கு என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது சர்வீஸ் கேட்க விண்ணப்பம் செய்ததில் 4 பேரிடம் கையொப்பம் வாங்கி கொடுத்துள்ளேன். அரசாங்க வழக்கறிஞரிடம் இளநிலை மின் பொறியாளர் சொல்லி கருத்துரை பெற்றுக்கொடுத்தார். நான் சர்வீஸ் பெறுவதற்கு பதிவு கட்டிணம் கட்டியதற்காக ரசீதியை நான் தாக்கல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். தாவா பிராதில் நான் ரூ.3000/- மின்சார சர்வீஸிற்காகவும், இதர செலவிற்காகவும் செலுத்தியாக நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ரூ.3000/-ற்கான ரசீதுயை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் ரூ.50,000/- செலவு செய்ததாக சொல்லியுள்ளதற்கு ரசீது எதுவும் ஒப்படைக்கவில்லை என்றால் ஒப்படைத்துள்ளேன். 4 ம் பிரதிவாதி எனக்கு மின் இணைப்பு கொடுக்ககூடாது என்று ஆட்சேபணை செய்தார் என்பதற்கு நான் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால்ள சரிதான்.

பொதுவில் 8ல் 1 பங்கு உள்ளதாக சொல்லும் நான் இதர பங்குதாரார்களை இவ்வழக்கில் அவசிய தரப்பனர்களாக கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி இதர பங்குதாரார்களை நான் இவ்வழக்கில் தரப்பினர்களாக கட்சி சேர்த்தால் வழக்கு எனக்கு விரோதமாகிவிடும் என்பதால் நான் அவர்களை கட்சி சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் சரியான முறையில் விண்ணப்பம் கொடுக்காததால் மின்வாரியத்திலிருந்து சர்வீஸ் கொடுக்கமுடியாது என்று சொல்லிவிட்டார்கள் என்றாலும், நான் 4ம் பிரதிவாதியை அவசியமில்லாமல் தொந்தரவு செய்வதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், 4ம் பிரதிவாதியின் மின் இணைப்பை நான் பயன்படுத்திகொள்ளலாம் என்ற எண்ணத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதியை பொறுத்து வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.